ATTN: AD

ජාතික ප්‍රතිපත්ති හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
**Ministry of National Policies and Economic Affairs**

"මිලෝදා" (පැරණි ටයිම්ස් ගොඩනැගිල්ල), පළමු මහල, බ්‍රිස්ටල් වීදිය, කොළඹ 01. "மிலோதா" (பழைய டைம்ஸ் கட்டிடம்), 1ஆம் மாடி, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01. "Miloda" (Old Times Building), 1st Floor, Bristol Street, Colombo 01.

මගේ අංකය / எனது இலக்கம் / My No.: MNPEA/PLN/DCB/2016 — ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No.: — දිනය / திகதி / Date: 12.01.2016

சுற்றறிக்கை இலக்கம்: MNPEA 01/2015 (i)

சகல மாவட்ட செயலாளர்களுக்கும்,

**<u>பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2016</u>**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக தங்களுக்கு அனுப்பிய 2015.11.26 ஆம் திகதிய MNPEA/01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. ஏற்கனவே அறியத்தரப்பட்டவாறு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ சாகல ரத்னாயக்க அவர்களுடன் நடாத்திய கலந்துரையாடல், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மாவட்ட திட்டமிடல் செயலகங்களின் பணிப்பாளர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள இரண்டு உதவிப் பணிப்பாளர்களுடன் மார்கழி 18 ஆம் திகதி என்னால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள், தெளிவு படுத்தல்கள் மற்றும் மாற்றங்களைத் தங்களது கவனத்திற்காக கீழே குறிப்பிடுகின்றேன்.

1. கீழ் குறிப்பிடப்படும் பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்களின் விடயப் பரப்புக்குள் உள்ளடக்கப்படும் மாவட்டங்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி சம்பந்தப்பட்ட பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்களின் ஊடாக தங்களுக்கு விடுவிக்கப்படும்.

    a) பெரு நகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு (கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்கள்)
    b) சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு (காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்கள்)
    c) உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு (குருநாகல், புத்தளம், கேகாலை மாவட்டங்கள்)
    d) புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்கள்)

දුරකථන / தொலைபேசி / Telephones: 011-3010214
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2339732, 011-2473643
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் / E-mail: info@mppea.gov.lk
Website: www.mppea.gov.lk

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டங்களை தங்களது மாவட்டத்திற்குரிய பிரதேச அபிவிருத்தி அமைச்சிடம் அனுமதியளிப்பு, தேவையான நிதி விடுவிப்பு என்பவற்றின் பொருட்டு சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தகவலுக்காக அங்கீகரிக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டுத் நிதியுதவித் திட்டப் பட்டியலின் பிரதியொன்றை அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்களின் விடயப் பரப்பின் கீழ் உள்ளடக்கப்படாத ஏனைய அனைத்து மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விதந்துரைப்புக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்த விதந்துரைப்பின் பேரில் குறித்த வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இந்த அமைச்சினால் விடுவிக்கப்படும்.

3. தங்களது மாவட்டத்திற்கு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை விடுவிப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விதந்துரைப்புக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்

4. நிர்மாணக் கருத்திட்டமொன்றுக்கான மிகக் குறைந்த செலவினம் ரூபா 200,000/= ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தயவுசெய்து இனங்காணப்படும் நிர்மாணக் கருத்திட்டமொன்றுக்கான மிகக் குறைந்த செலவீடாக ரூபா 200,000/= ஆகவும் மற்றும் உச்சநிலை செலவீடாக ரூபா 5 மில்லியன் ஆகவும் பேணிக்கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

5. இதற்கு முந்திய 2015.11.26 ஆம் திகதிய MNPEA/01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆவது பிரிவு "அரசாங்கத்தின் சகல ஒப்பந்தப் பணிகளும் கொள்முதல் வழிகாட்டல்களின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், சமூக மட்ட நிறுவனங்கள் உட்பட எத்தரப்பினருக்கும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நேரடியாக ஒப்பந்தப் பணிகளை அளிக்கவோ, விருப்பத் தெரிவுகளை வழங்குவதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது." என இச் சுற்றறிக்கை ஊடாகத் திருத்தியமைக்கப்படுகின்றது. இது தொடர்பாக மாவட்டத்தில் ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு ஆர்வமும் ஆற்றலும் கொண்ட தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கும் பயிற்சியளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை நீங்கள் எடுத்தல் வேண்டும். மேலும், பிரதேச செயலாளர்கள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்காக இந்த ஆண்டின்

முதற் காலாண்டிலேயே ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

6. இப் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் முழுமையான செயற்படுத்துகையின் கண்காணிப்பு, பெறுபேறுகளின் அடைவுகளை உறுதிப்படுத்துதல் என்பன இந்த அமைச்சின் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும்.

**எம்.ஐ.எம்.றபீக்**
செயலாளர்

பிரதிகள் :-

1. அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்கள் - தங்களது தகவலுக்காக
2. செயலாளர், நிதி அமைச்சு
3. செயலாளர், உள்நாட்டலுவல்கள் அமைச்சு
4. செயலாளர், பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு
5. செயலாளர், சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு
6. செயலாளர், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
7. செயலாளர், புனர்வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு

(2–7) தங்களது தகவலுக்கும் இச்சுற்றறிக்கை, 26.11.2015 ஆம் திகதியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கை (பிரதி இணைக்கப்பட்டுள்ளது) என்பவற்றின் உள்ளடக்கத்தைக் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக

8. அனைத்துப் பிரதம செயலாளர்கள் - தகவலுக்காக
9. கணக்காய்வாளர் நாயகம் - தகவலுக்காக
10. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காக
11. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
12. பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்.
13. மாவட்ட திட்டமிடல் செயலகங்களின் பணிப்பாளர்கள்
14. பிரதம கணக்காளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

(11–14) தங்களது தகவலுக்கும் அவசியமான நடவடிக்கைக்குமாக